# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>இலங்கை அரச ஊடக அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி</u>

இலங்கை அரச சேவையில் ஊடக அதிகாரிகளாக பணியாற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 30 பேரடங்கிய பேராளர்கள் 2025 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை விசேட பயிற்சி திட்டம் ஒன்றில் பங்கேற்பதற்காக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். இந்த பேராளர்கள் குழாமில் பிரதமர் அலுவலகம் மற்றும் வெளி விவகார அமைச்சு ஆகியவற்றின் ஊடகப்பிரிவு, அரச தகவல் திணைக்களம் மற்றும் மாவட்ட ஊடக பிரிவுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் அங்கம் வகித்திருந்தனர். 2025 ஏப்ரல் மாதம் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கை அதிகாரிக்களுக்கான பயிற்சிகளுக்காக வருடாந்தம் 700 ஆசனங்களை ஒதுக்குவதற்கு உறுதி அளித்திருந்த நிலையில் அதற்கமைவாக இந்த பயிற்சி திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

2. குறித்த இரு வாரகால பயிற்சித் திட்டமானது இலங்கை அரசாங்க தகவல் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைவாக இந்திய அரசாங்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு சேவைகளுக்கான சுஷ்மா ஸ்வராஜ் நிலையம், வெகுஜன தொடர்புகளுக்கான இந்திய நிலையம் மற்றும் பத்திரிகை தகவல் பணியகம் உள்ளிட்ட முன்னணி இந்திய நிறுவனங்களால் இப்பயிற்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தில் பொது இராஜதந்திரம், ஊடகத் தொடர்புகள், டிஜிட்டல் ஊடக செயற்பாடுகள் மற்றும் ஊடக முகாமைத்துவம் உள்ளிட்ட தலைப்புகளில் கலந்துரையாடல் அமர்வுகள் உள்வாங்கப்பட்டிருந்தன.

3. அனுபவங்களை பெற்றுக் கொள்ளும் குறித்த கற்றல் நிகழ்ச்சி திட்டத்தின் அங்கமாக இப்பேராளர்கள் தொழில்துறை தொழில்நுட்பத்துக்கான கலிங்கா நிலையம், ஒடிசா அனர்த்த முகாமைத்துவ ஆணையம், மற்றும் கலிங்கா அரங்கம் உள்ளிட்ட பல்வேறு முன்னணி நிறுவனங்களுக்கும் நேரடி விஜயங்களை மேற்கொண்டிருந்தனர். இந்த விஜயத்தின்போது ஒடிசா மாநில கௌரவ முதலமைச்சர் அவர்களை சந்தித்ததுடன், ஊடகம் மற்றும் பொது தொடர்புகள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பினை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டிருந்தது.

4. தொழில் ரீதியான பயிற்சிகளுக்கு அப்பால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகள் உள்ளிட்ட தொழில்நுட்ப முன்னேற்றம், சுற்றுலாத்துறை போன்ற துறைகளிலும் இப்பயிற்சிகளின்போது கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் இந்தியாவின் உயர்வான கலாசார மரபுகள் மற்றும் அன்பான விருந்தோம்பல் ஆகியவற்றை நேரடியாக அனுபவிப்பதற்கான வாய்ப்புகளும் அவர்களுக்கு கிடைக்கப்பெற்றிருந்தது.

5. இலங்கையின் அரச ஊடக அதிகாரிகளுக்காக முன்னெடுக்கப்பட்ட இந்த விசேட பயிற்சி திட்டம் தொழில் ரீதியான நிபுணத்துவம், அறிவு பகிர்வு , இலங்கை மற்றும் இந்தியா இடையிலான ஊடக மற்றும் தொலைத்தொடர்பு துறை சார்ந்த நிர்வாக இணைப்புகள் ஆகியவற்றை மேம்படுத்த வழிசமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

************

**கொழும்பு**
**11 செப்டெம்பர் 2025**